

Vol.26 | No. 3 | March 2022

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



Consecration, St. Joseph's Church, Valan Nagar, Kunnuvilai, 20.02.2022





Syro Malabar Mission Quiz 2022, Winners Sangamam 24.02.2022





KKSSS, Relief Things, World Health Day Programme @ Pilankarai, Skill Training. 2022, Feb. 28, 11, 14-16







World Health Day, Chenamcode 11.02.2022






Priests' Ongoing Formation @ Sangamam, 2022 Feb, 23-24.



THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 26 No :3 MARCH 2022



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron
His Excellency
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Iyathurai**
**Mr. Jesin Joseph**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Jesin J Joseph**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

Bishop's Message 02
ஆயர் திருமுகம் 06
மிஷன் வீக் 09
இளையோர் இயக்கம் (SMYM) 10
Feastdays of Fathers 11
இளையோர் கல்விப் பணியகம் (TYES) 12
இல்வாழ்வு இயக்கம் 13
வின்சென்ட்-தே-பவுல் சபை 15
சமூக சேவை சங்கம் (KKSSS) 17
மறைமாவட்ட செய்திகள் 19
மறைவட்ட செய்திகள் 22
Bishop's Engagements 35

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/131/2022**

**28 February 2022**

**Dear Readers,**

Lent is a time for change. This season calls us to reflect on transformational change so that we can celebrate Easter meaningfully. Spring time is lush with rebirth, new beginnings, and new growth. Too often, however, we want to race to the Easter Resurrection without fully embracing the Lenten process that leads there. Lent reflects the days and the nights that Jesus wandered in the wilderness - tempted by Satan - in readiness for a ministry destined to end in tragedy. Few of us can relate to the level of sacrifice and commitment that Jesus displayed in his forty days, yet Lent provides us with an opportunity to deepen our spirituality by engaging in regular discipline from Ash Wednesday through Easter Sunday. The wilderness - the desert days of Lent - is the true path toward spiritual transformation.

There is a compelling metaphor that helps us embrace the wilderness and prevents us from racing to Easter. It is the metaphor of the seed. Jesus began his teaching ministry with the parable of the sower (Mk 4: 1-20) and referred to seeds and trees, fruit and branches, throughout his ministry. To see the image of Christian growth and spiritual development contained in a seed is to learn valuable lessons about change and transformation. Let us examine them and make these lessons our own during this season of Lent so that we may grow spiritually and help our people to

spend the season of Lent well.

Seeds Need a Rich Environment: A seed that lacks appropriate soil may sprout, but will quickly wither and die. Even in the best soil, without water and nutrients, growth will be limited. Without sun and cultivation, plants will decay and spoil. Seeds require a rich, healthy environment in which to grow. This applies to the environment in which we grow as his priests. There must be an ongoing flow of comfort and security, challenge and inspiration, learning and service. Without such an environment, discipleship growth is stunted, stagnant, or worse, dead. We create an environment for our spiritual formation through prayer, study, worship, fellowship, and service.

Seeds Cannot Be Rushed: When seeds do not sprout, take root, and grow, try yelling at them. Of course, that is a preposterous idea. No one would ever think that they could somehow rush the normal growing process. Seeds require the amount of time that they require. In God's plan, the time things take is the right time. People, however, get impatient. Our culture puts pressure on us to rush through everything. We live in an age of instant gratification. Seeds teach us that we need to learn to wait, to develop patience. Priestly formation is a process of seedlike growth. Patience is the key ingredient to transformational growth.

All Seeds Grow at Different Paces: Plant a package of seeds, and immediately you see diversity in the rate of growth. Some sprout almost immediately and begin a steady rate of growth. Late sprouters often become early bloomers. Some normal beginners end up stunted and sickly. Growth is rarely even, and it is often chaotic. Nothing we do will change this diversity. Where seeds are concerned, we are comfortable with different rates of development. This is not always true with our attitudes about

Christian believers. We often adopt a 'cookie-cutter' approach to disciple making that makes some seem advanced, while others lag behind. The seed teaches us that to mature in different ways at different times is the only true normal.

Change Happens in Stages: Examine any plant as it grows from seed to maturity, and you will find that it is hard to believe you are looking at the same plant. While the growth follows a smooth process, it proceeds through distinct stages. These stages are marked by unique characteristics and are a measure for the relative health and well-being of the plant at any given time. Our spiritual development progresses through stages as well. Belief and inquiry deepen to devotion and discipleship. Learning and following evolve into teaching and leading. Growth within the community of faith matures to a life of service in the world. We move through ages and stages of faith development as we grow from seed to sapling to fruit-bearing tree.

Seeds Contain the Past and the Future: Each seed is the product of previous generations and contains within it all the genetic code for the future. Seeds are filled with the information that yields transformation. Each generation builds upon the last and lays the foundation for the next generation. The Word of God is the information we contain - passed down throughout the ages and preserved in us for the future - that holds the power to transform us. When we give ourselves time to grow, we unleash the God-given power to become mature priests after the heart of Christ.

Seeds Have a Purpose Larger Than Themselves: Growth is not the purpose of a seed, but a means to an end. Unless seeds give rise to new seeds, they fail to fulfil their purpose. Transformation never happens for its own sake. Change happens to lead us to a new place. Growth occurs that we might not only know more, but that we might do more. Seeds are judged, ultimately, on the fruit that

they bear. We may never content themselves with growing in their knowledge and love of God. Growth that fails to lead to a change in behaviour is cancerous, not healthy. We grow for a reason, and that reason is something much larger than any individual's needs.

The lessons of the seed help us see Lent, not as a time of sacrifice and denial, but as a time of preparation and anticipation - preparation for the work to which God calls us and anticipation of the fullness of life that God promises. Let us spend these days of fasting, prayer and almsgiving to grow in our priestly identity and to minister to the faithful who are under our care with greater commitment and enthusiasm!

We have entered the holy season of Lent with the reception of ashes on 28 February 2022. The season is marked by prayer, fasting and almsgiving. Echoing the importance of these Lenten disciplines, in his message for Lent, Pope Francis calls the Lenten season a favourable time for personal and communitarian renewal. He also invites us to pray for the suffering people of Ukraine. It is also a time set apart for deeper dialogue with God through prayer, for renewed gratitude for God's mercy and for increased compassion for people whose lives are under attack. We must not only show generosity through charitable giving, but they should also work for a real structural change to today's economic life. Let us become instruments of these changes in a world that is torn apart by violence, hatred and disunity.  I wish all of you a happy and fruitful season of Lent.

Yours in Christ Jesus,

BISHOP GEORGE RAJENDRAN SDB
Diocese of Thuckalay

+ George Rajendran SDB

Bishop of Thuckalay

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay

ஆயர் சுற்றுமடல்

Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Pastoral Letter No/GR/46/2022**

# ஆயர் திருமுகம்

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

தவக்காலம் மீட்பின் காலம்; இரக்கத்தின் காலம்; ஆண்டவரின் அளப்பெரிய அன்பை உணர்த்தும் காலம்; இறைவனில் மட்டும் நம்பிக்கை கொள்ளும் காலம்; இறைகுரலுக்காக காத்திருக்கும் காலம்; இக்காலம் ஆண்டவரை எதிர்நோக்கும் காலம் என்று திருபாடல் 34:5 - ல் நாம் வாசிப்போம் "ஆண்டவரை நோக்கிப் பார்த்தோர் மகிழ்ச்சியால் மிளிர்ந்தனர்" என்று இக்காலம் நம்மை மீட்பின் பாதையில் நம் வாழ்க்கையை தொடரத் தூண்டும் காலம்.

தவத்தின் பயன் என்பது "மனமாற்றம்"; எனவே, நம் செயல்பாடுகள் அனைத்தும் நாம் தவத்தை கடைபிடிக்கின்றோம் என்பதை உணர்த்த வேண்டும். "மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்" என்று லூக்கா 3:8 -ல் நாம் வாசிக்கின்றோம். சக்கேயு தன் செயல்பாட்டால் மனமாற்றத்தை வெளிப்படுத்தியபோது ஆண்டவர் இயேசு "இவரும் ஆபிரகாமின் மகனே" (லூக் 19:9) என்று ஆசீர்வதித்து வாழ்வு கொடுத்ததை நாம் பார்க்கிறோம். மனமாற்றம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் ஓர் அடையாளம். தவக்காலம் இறைவனை நோக்கிப்பார்க்கும், மன்றாடும் காலம். விடுதலை பயண நூலில் மோசே ஆண்டவரோடு உறவாடிய நிகழ்வை பார்க்கிறோம் (வி.ப. 24:8). மோசே மலையில் நாற்பது பகலும் நாற்பது இரவும் தங்கினார். இது ஆழமான இறை உறவின் அடையாளம். முதல் அரசர் ஆகமத்தில் இறைவாக்கினர் எலியாவின் நோன்பும், இறை உறவும், இறை பராமரிப்பும் வெளிப்படுவதை பார்க்கின்றோம் (1 அரசர் 19:8). எலியா 40 பகலும் எலியா 40 இரவும் நடந்து ஓரேபு என்ற கடவுளின் மலையை அடைந்தார்". எனவே, கடவுளின் பிரசன்னத்தை உணர, அதை

கண்டடைய தொடர் முயற்சி தேவைப்படுகின்றது. யோனா 3-ம் அதிகாரத்தில் நினிவே நகர் அழிக்கப்படும் என்ற செய்தியால் உள்ளம் குத்துண்ட "அரசன் தன் அரியணையை விட்டிறங்கி, அரச உடையை களைந்துவிட்டு சாக்கு உடை உடுத்தி சாம்பல் மீது உட்கார்ந்தார். (யோனா 3:6). இங்கே சாக்கு - எளிமையை குறிக்கின்றது, சாம்பல் - வெறுமையை காட்டுகின்றது. எளிமையும், வெறுமையும் நம்மை வாழ்வுக்கு அழைத்து செல்லவேண்டும். "இயேசு 40 நாள் இரவும் பகலும் நோன்பிருந்தார்" என்று மத் 4:2 - ல் காண்கின்றோம். எனவே அன்பு இறைமக்களே இந்த நோன்பு காலம் நம்மை நல்ல செயல்பாட்டுக்கு அழைக்கவேண்டும். தருமம் செய்தல், தானம் செய்தல், ஏழைகளுக்கு உதவுதல் எல்லாமே வாழ்வு தரும் அடையாளங்களாக அமைகின்றன. "நீ செய்யும் தருமம் உன்னை சாவிலிருந்து விடுவிக்கும், இருளில் செல்லாதவாறு காப்பாற்றும்" (தோபி 4:10). இன்று ஆண்டவர் வாழ்வுக்கான வழியை திறந்து வைக்கின்றார். வாழ்வின் வழியை ஏற்பதும் ஏற்காமல் இருப்பதும் நம்மிடமே உள்ளது. "இதோ பார் வாழ்வையும் நன்மையையும், சாவையும் தீமையையும் இன்று நான் உனக்கு முன்பாக வைக்கின்றேன்" என்று இணைச்சட்டம் 30 ம் அதிகாரம் 15-ம் வசனத்தில் நாம் வாசிக்கின்றோம். எனவே, அன்பான இறைமக்களே வாழ்வுக்கான வழியை தேர்ந்து, மனம்மாறி கிறிஸ்துவுக்கு உகந்தவர்களாய் வாழ இத்தவக்காலம் நம்மை அழைக்கின்றது.

நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தவக்கால சிந்தனையாக அரியதொரு கருத்தை பதிவு செய்திருக்கின்றார்; அதை உங்களிடம் பகிர்ந்து கொள்கின்றேன். பிரிக்க முடியா பிணைப்பாகிய உறவுகளோடு வெளிவேடமின்றி உள்ளார்ந்த அன்புடன் நம்மால் உறவாட முடிகின்றதா? அல்லது அவர்கள் நம்முடன் இருக்கும்போது உயர்வாக அவர்களைப் பேசுவதும் நம்மைவிட்டு அகன்றதும் அவர்களின் குறைகளை மிகைப்படுத்தி நற்பெயருக்கு களங்கங்கள் வருவிப்பவர்களாக இருக்கின்றோமா? என்று திருத்தந்தை நம் ஒவ்வொருவரையும் பார்த்து கேட்கின்றார். ஒருவேளை மனித பலவீனத்தால் இந்த குணநலன்களை நாம் பெற்றிருந்தால் இரண்டு செயல்களை நாம் செய்ய வேண்டும் என்று திருத்தந்தை அறிவுறுத்துகின்றார். முதலாவது ஜெபம், இரண்டாவது நமது நாவுக்கு ஒரு பெரிய கடிவாளம் இடவேண்டும்! இந்த இரண்டும் இத்தவக்காலத்தில் இறைவன் தரவேண்டுமென்று செபித்து முயன்று உழைப்போம். "உள்ளத்தில் அன்பு இல்லாமல் மலரைத் தூவினாலும் அது கல்லாக போய் சேரும், உள்ளத்தின் அன்பு கல்லை எறிந்தாலும் அது மலராகத் தொடும்".

மூன்றாம் உலகப்போரின் தொடக்கமாக இருக்குமோ என்று ஐயப்படும் அளவுக்கு ரஷ்யா உக்ரைன் மீது தாக்குதலை தொடர்ந்து உயிர்களை காவு-வாங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே இந்த தவக்காலத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நாம் அனைவரும் வருகின்ற பிப்ரவரி 28-ம் தியதி விபூதி திங்கள் அன்று உண்ணா நோன்பு இருந்து செபிக்க அழைப்பு விடுத்துள்ளார். நம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் எண்ணத்திலும் போரின் நிமித்தமாக அவதியுறுகின்ற மக்களுக்காக செபிப்போம்.

அன்பான இறைமக்களே, பிப்ரவரி 28-ம் தியதி விபூதி திங்களுடன் நாம் துவங்குகின்ற 50 நாள் தவக்காலம், நமது அன்பை ஆணிவேராகவும், ஜெபத்தை நம் வாழ்வின் அடித்தளமாகவும், தவ முயற்சிகள் நம்மை செம்மைப்படுத்தும் ஆயுதமாகவும் மாற்ற உதவட்டும். அப்போது எசாயா இறைவாக்கினர் கூறுவதுபோல "உன் ஒளி விடியல் போல் எழும்; விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும்; உன் நேர்மை உனக்கு முன் செல்லும்; ஆண்டவரின் மாட்சி உனக்கு பின் சென்று காக்கும் (எசாயா 58:8).

அன்பு இறைமக்களே, இத்தவக்காலத்தில் நமது ஆலயத்தில் நடைபெறுகின்ற சிறப்பு திருப்பலியிலும், ஆராதனை பக்தி வழிபாடுகளிலும் தவறாமல் கலந்து கொண்டு இறை உறவை வளர்க்க உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஊக்குவிக்கவும் ஆலயம் செல்ல ஆவனச் செய்யவும் கடமைப்பட்டவர்கள். நான் உங்களுக்காகவும் உங்கள் தனிப்பட்ட கருத்துக்களுக்காகவும் ஜெபிக்கின்றேன். உங்கள் ஜெபத்தில் என்னையும் மறைமாவட்டத்தையும் நினைவில் கொள்ளவும்.

நம் ஆண்டவராகிய ஈசோ மிசிகாவின் அருளும் தந்தையாகிய கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் இத்தவக்காலத்தில் உங்களோடு என்றும் இருப்பதாக !

என்றும் மிசிகாவில்

ஆயர் இல்லம்
26.02.2022

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இவ் ஆயர் திருமுகமானது 27.02.2022 அன்று திருப்பலிக்கு இடையே பின்னர் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலும் சிற்றாலயங்களிலும் வாசிக்கவும்.

# சிறுமலர் MISSION LEAGUE



# மிஷன் லீக்

18.02.2022 அன்று மாலை 8.30 மணிக்கு மிஷன் லீக் இயக்க செயற்குழு கூட்டம் Google meet வழியாக அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அருட்சகோதரி ஆன் கிரேஸ் அவர்கள் தொடக்க செபம் நடத்தினார்கள். தந்தை அவர்கள் பேசுகையில் எல்லா பங்குகளையும் மறைவட்டங்களையும் இணைக்கும் அமைப்பை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மறைவட்டம் மற்றும் மறைமாவட்டத்தோடு தொடர்பில் இல்லாதவர்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு தொடர்பை சரிசெய்ய அருட்தந்தை அவர்கள் வலியுறுத்தினார்கள்.

2022-2023 ஆம் ஆண்டுக்கான பொறுப்பாளர்களை பங்களவில் தேர்ந்தெடுத்து அவர்களின் பெயர்களை மார்ச் முதல் தேதிக்குள் மறைமாவட்ட அலுவலகத்தில் ஒப்படைக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. கூட்டமானது இரவு 9 மணியளவில் இறுதி ஆசீருடன் முடிவடைந்தது. பின்னர் மறைவட்ட இயக்குநர்களின் கூட்டமானது நடைபெற்றதுய இயக்கத்தின் வளர்ச்சிக்கான விவாதங்கள் கூட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்டது.

இப்படிக்கு<br>
அருட்தந்தை பிரின்டோ குரியாஸ்<br>
இயக்குநர்.

## BIRTHDAYS OF REV. FATHERS - MARCH - 2022

| | |
|---|---|
| Fr. Joseph Santhosh | 03 |
| Fr. Thomas Powathuparampil | 15 |
| Fr. Mathew Thekkekutt | 15 |
| Fr. Sinoy Panackachalil MCBS | 19 |
| Fr. Thomas Sathianesan | 20 |
| Fr. Sumesh Valliyamthadathil | 26 |

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### இணையவழி மறைவட்ட இயக்குநர்கள் கூட்டம்

12.02.2022 அன்று இணையம் வழியாக ஏழு மறைவட்ட இயக்குநர்கள் கூட்டமானது மறைமாவட்ட இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் அனைத்து இயக்குநர்களும் பங்கேற்றனர்.

கூட்டத்தின் போது, மஞ்சாலுமூடு மறைவட்டத்தின் இயக்குநராக இருந்த அருட்தந்தை ஜேம்ஸ் கானாகாலில் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. அத்தோடு புதிதாக நியமனம் பெற்ற அருட்தந்தை ரோபின் ஜோஸ் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. இயக்குநர் தந்தை அனைத்து தந்தையர்களுக்கும் நன்றி கூறியதோடு, கிறிஸ்மஸ் நிகழ்வை ஏற்பாடு செய்து நடத்த முழு ஒத்துழைப்பு கொடுத்த அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்களுக்கு நன்றி கூறப்பட்டது.

பின்னர், மறைமாவட்ட போட்டிகள், இணையவழி உறுப்பினர் சேர்க்கை, தவக்கால தியானம், தலைமைத்துவ பயிற்சி, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான வழிகாட்டி கருத்தமர்வு, பயிற்சியாளர்களுக்கான பயிற்சி, தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம் போன்றவை பற்றிய விவாதங்கள் நடத்தப்பட்டன. அருட்தந்தையர்கள் பல பரிந்துரைகளை முன்வைத்தனர். குறிப்பாக பங்களவில் இளையோருக்கு வேலை மற்றும் கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மறைமாவட்ட போட்டிகளில் மாற்றம் கொண்டு வருதல் போன்றவை விவாதித்தனர்.

### நடுவண் செயற்குழு கூட்டம்:

நடுவண் செயற்குழு கூட்டமானது 18.2.2022 அன்று தெற்றியோடு புனித சூசையப்பர் ஆலயத்தில் வைத்து இளையோர் இயக்க இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 8 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மறைமாவட்டம் மற்றும் மறைவட்ட அளவிலான இளையோர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட வேண்டிய தேதிகள் முடிவெடுக்கப்பட்டது. மறைவட்ட அளவிலான போட்டிகள் மார்ச் 20, 27, ஏப்ரல் 3 ஆகிய மூன்று நாட்களில் நடத்தப்படும் என்றும் மறைமாவட்ட அளவிலான போட்டிகள் ஏப்ரல் 30 அன்று நடத்தப்படும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. பின்னர் மகளிர் தினத்தை முன்னிட்டு மார்ச் 6-ஆம் தேதி மறைவட்ட மற்றும் மறைமாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்களுக்காக தலைமைத்துவம் குறித்த வகுப்பு அருட்தந்தை அருள் ஆன்டனி SDB அவர்கள் தலைமையில் நடத்தப்படும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

### அருட்தந்தையர் கூட்டத்தில் வருடாந்திர அறிக்கை

சீரோ மலபார் இளையோர் இயக்கம், தக்கலை இன் 2020-2021 ஆண்டுக்கான அறிக்கையானது 24.02.2022 அன்று நடந்த இயக்கங்களின் மதிப்பீடு பற்றிய சிறப்பு

அருட்தந்தையர் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இயக்குநர் தந்தை அவர்கள் அறிக்கையை சமர்ப்பித்தத்துடன், அனைத்து அருட்தந்தையர்களுக்கும் நன்றி தெரிவித்து அவர்களின் கூடுதலான ஒத்துழைப்பையும் கோரினார். இளையோர் இயக்கத்தின் செயல்பாடுகளை விவாதிப்பதற்காக பதினைந்து நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது

*இவண்*
*சஜித்*
*செயலர்*

| FEASTDAYS OF REV. FATHERS - MARCH - 2022 | |
|---|---|
| Fr. Ajin Jose | 19 |
| Fr. Dency Mundunadackal | 19 |
| Fr. Jimmy Thekkekadumathil | 19 |
| Fr. Jinoy Thottiyil | 19 |
| Fr. Jinu Thekkethalackal | 19 |
| Fr. Jomon Mangalamadom | 19 |
| Fr. Jose Muttathupadom | 19 |
| Fr. Jose Vayalil | 19 |
| Fr. Joseph Anithottam CMI | 19 |
| Fr. Joseph Santhosh | 19 |
| Fr. Josy Puthenpurackal | 19 |
| Fr. Prince Maliyil | 19 |
| Fr. Reju Puthuparambil MCBS | 19 |
| Fr. Sajan Nettaponghu | 19 |
| Fr. Vinu D Joseph | 19 |
| Fr. Robin Josse | 19 |
| Fr. Joseph Kozhuvakandathil | 19 |
| Fr. Jose Kanachikuzhiyil | 19 |
| Fr. Lins Karumpanavayalil CMI | 19 |
| Fr. Printo Kurias | 19 |
| Fr. Benny Thattamparampil | 19 |
| Fr. Joseph Keeramchira | 19 |

## தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம்

Thuckalay Youth Educational Services in Collaboration with Trichy Vazhikatti

### இணைய வழி பொங்கல் விழாப் போட்டிகள்

தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம் திருச்சி தொன் போஸ்கோ உதவியுடன் முத்தூட் நிதி நிறுவனத்தின் பணியாளர்களுக்கான நேர்முகத்தேர்வானது 10.02.2022 அன்று TYES அலுவலகம், கல்லுவிளையில் நடைபெற்றது. எம் பணியகத்தின் இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் தொன் போஸ்கோ வழிகாட்டி வேலைவாய்ப்பு ஒருங்கிணைப்பாளர் திரு. அருமைராஜ் மற்றும் திரு. ருதின் அவர்களும் கலந்து கொண்டனர். நேர்முக தேர்வில் 22 இளையோர்கள் கலந்து கொண்டனர் மற்றும் 12 இளையோர்கள் இரண்டாம் கட்ட நேர்முகத் தேர்விற்கு தேர்வு செய்யப்பட்டனர். KIML - சென்னை நிறுவனத்தின் பணியாளர்களுக்கான நேர்முகத் தேர்வானது 25.02.2022 அன்று கல்லுவிளை அலுவலகத்தில் நடைபெற்றது. திரு. அருண் பிரசாத் HR மற்றும் ரவி HR அவர்கள் கலந்து கொண்டனர்.எம் கல்வி சேவை பணியகத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி. ஷீஜிமோள் அனைவரையும் வரவேற்று பேசினார்.நேர்முகத்தேர்வில் 4 இளையோர்கள் கலந்து கொண்டனர். 4 இளையோர்களும் பணி நியமன ஆணை பெற்றனர்.

### வாழ்க்கைத்திறன் பயிற்சி

தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம் மற்றும் திருச்சி தொன் போஸ்கோ வழிகாட்டி உதவியுடன் காட்டாத்துறை, புனித மிக்கேல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் வாழ்க்கைத் திறன் பயிற்சி நடைபெற்றது.விரிவுரையாளர்களாக அருட்தந்தை ஜெயன் ஜோசப், வழிகாட்டி திருச்சி இயக்குநர், திருச்சி தொன் போஸ்கோ வழிகாட்டி ஷீஜி மோள், ஒருங்கிணைப்பாளர், தக்கலை இளையோர் கல்வி பணியகம் ஆகியோர் கலந்து கொண்டனர். .கருத்தமர்வில் 250 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மார் இவானியோஸ் சி.பி.எஸ்.சி குழித்துறையில் 11.02.2022 அன்று வாழ்க்கைத் திறன் பயிற்சி நடைபெற்றது. விரிவுரையாளர்களாக அருட்தந்தை அருள் ஆன்டணி, இயக்குநர் திருச்சி வழிகாட்டி, திரு ராஜ ஆகியோர் கலந்து கலந்து கொண்டனர். கருத்தமர்வில் 42 மாணவர்ககள் கலந்து கொண்டனர்.

ஷீஜி மோள்,
அலுவலக செயலர்
அலைபேசி: 8667428054

# இல்வாழ்வு இயக்கம்



"இறைவா பிறரிடம் ஆறுதல் தேடுவதை விட, பிறருக்கு நான் ஆறுதல் தரவும். பிறர் என்னைப் புரிந்திடவேண்டுமென்பதை விட நான் பிறரைப் புரிந்து கொள்ளவும். பிறர் எனக்கு அன்பு செய்தல் வேண்டுமென்பதைவிட, பிறருக்கு நான் அன்பு செய்திடவும் உதவி செய்வீராக. ஏனெனில் தன்னலமறுப்பிலேதான் பொதுநலமும், மன்னிப்பிலேதான் பெருமன்னிப்பும், இறப்பிலேதான் மரணமில்லாப் பெருவாழ்வும் பெற முடியும்."

- புனித பிரான்சிஸ் அசிசி

***இல்வாழ்வு இயக்கம்***

உலகிற்கு ஒளியாய் வாழ்வுக்கு வழியாய் திகழுகின்றது திருக்குடும்பம். அத்திருக்குடும்பத்தை போன்று குடும்பங்களிலும் ஒற்றுமையான குடும்ப வாழ்வு அமைய வேண்டும் என்னும் நோக்குடனும், தாழ்நிலையில் இருந்த தம் அடியாரைத் தயையுடன் கடைக்கண் நோக்கினார் என்ற இறைவசனத்திற்கு இணங்க துன்பப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்ற குடும்பங்களுக்கு முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல ஒரு வழிகாட்டியாக இவ்வியக்கம் செயல்பட்டு வருகிறது.



Psycho-Spiritual Refreshment Course

2021 அக்டோபர் 29 மற்றும் 30 நடைபெற்ற Psycho -Spiritual Refreshment course ல் பயின்ற தாய்மார்களுக்கு whatsapp Group கள் தொடங்கப்பட்டு Followup செய்யப்பட்டது. அதன் நிறைவாக பிப்ரவரி 5 ம் தேதி திற்பரப்பில் வைத்து மறு ஆய்வு பயிற்சி கொடுக்கப்பட்டது. இதில் சுமார் 10 தாய்மார்கள் பங்கேற்று பயன் அடைந்தார்கள்.

### *மாதர் ஜோதிஸ் இயக்கம்*

மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக மஞ்சாலுமூடு ஆறுகாணி மற்றும் களியல் மறைவட்டங்களுக்கான பெறுப்பாளருடைய கூட்டம் பிப்ரவரி 6 ம் தேதி மதியம் 2 மணியாளவில் புனித மரியன்னை ஆலயம் களியலில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு இயக்குநர் தந்தை அவர்கள் தலைமை தாங்கினார். அந்தந்த மறைவட்டத்திற்கு புதிதாக பெறுப்பாளர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டனர். பின்னர் ஆண்டுவிழாவை பற்றி கலந்து ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் சுமார் 40 பேர் கலந்துக் கொண்டனர். பின்னர் 4 மணியளவில் கூட்டம் நிறைவுற்றது.



மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக படந்தாலுமூடு மற்றும் நித்திரவிளை மறைவட்டங்களுக்கான பெறுப்பாளருடைய கூட்டம் மார்ச் 6 ம் தேதி மதியம் 2 மணியளவில் திரு இருதய ஆலய வளாகம் படந்தாலுமூட்டில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு இயக்குநர் தந்தை அவர்கள் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் அந்தந்த மறைவட்டத்திற்கு புதிதாக பெறுப்பாளர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டனர். பின்னர் ஆண்டுவிழாவை பற்றி கலந்து ஆலேசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் சுமார் 60 பேர் கலந்துகொண்டனர். பின்னர் 4 மணியளவில் கூட்டம் நிறைவுற்றது.

### *திருமண ஆயத்தப் பயிற்சி*

திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது மார்ச் 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் இல்வாழ்வு இயக்கம் கல்லுவிளையில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் 11 இளைஞர்கள் பங்கேற்று பயன் அடைந்தார்கள்.

அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்
இயக்குநர், இல்வாழ்வு இயக்கம்




# வின்சென்ட்-தே-பவுல் சபை

### *பென்கிரி கிளைச்சபை*

மஞ்சாலுமூடு வட்டார சபைக்குட்பட்ட பென்கிரி புனித பெனடிக்ட் வின்சென்டிய கிளைச் சபையின்



புதிய தலைவராக சகோதரர் ரவிந்திரன் அவர்கள் 20.1.2022 அன்று ஆன்மீக ஆலோசகர் முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டார்.

### *முக்கூட்டுக்கள் கிளைச்சபை*

முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயத்தில் இயங்கி வரும் வின்சென்ட் தே பவுல் கிளைச் சபை



சார்பாக நோயாளி ஒருவரின் வீடு சந்தித்து அவருக்காக ஜெபம் செய்து பொருளுதவி வழங்கினார். ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள்.

### *கித்திரவிளை வட்டார சபை*

நித்திரவிளை வட்டாரசபையின் புதிய தலைவராக சகோ ரசல் ஜாண் அவர்கள் பொறுப்பேற்றுகொண்டார். இந்த நிகழ்வில் பேருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் மற்றும் தக்கலை மத்தியசபை தலைவர் சகோ ராபி அவர்கள் கலந்துகொண்டு

சிறப்பித்தார்கள். அவரின் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

***வயலிங்கரை - கிளைச்சபை***

புனித அந்தோனியார் ஆலயம் வயலிங்கரை புனித வின்சென்ட் தே பவுல் கிளைசபையின் சார்பாக நோயாளிகள் தின சிறப்பு திருப்பலி 13/02/2022 அன்று



காலை 9.00 மணியளவில் அருட்தந்தை தோமஸ் செபாஸ்டின் (இயக்குநர் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்) மற்றும் அருட்தந்தை ராபின்ஸ் குழிகோடில் தலைமையில் ஆரம்பமானது. இந்த சிறப்பு திருப்பலியில் 15 படுக்கை நோயாளிகளை அவர்கள் இல்லத்தில் இருந்து ஆலயத்தில் கொண்டுவரபட்டனர். இந்த நிகழ்விற்கு வின்சென்டிய உறுப்பினர்கள் தலைமையேற்று வழிநடத்தினர்.

தகவல் சேகரிப்பு<br>
D. P. ஷாஜி<br>
தகவல் தொடர்பு அலுவலர்

**ஆராதனை துறவற சபையின் தமிழ்நாடு மாகாணம் ஆரம்பம்**

ஆராதனை சபை (SABS) சகோதரிகள், நமது மறைமாவட்டத்தில் 1980 ஆம் ஆண்டு தொடங்கி பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் சங்கனாசேரி மாகாணத்தின் பகுதியாக இருந்தவாறு செயலாற்றி வந்தார்கள். பின்னர் அது வட்டாரமாக பிரிக்கப்பட்டது. தற்போது அது மாகாணமாக உயர்த்தப்பட்டது. அந்நிகழ்வானது பிப்ரவரி 6, 2022 அன்று குசைபுரத்தில் வைத்து நடைபெற்றது.

# கன்னியாகுமரி
## சமூக சேவை சங்கம்

*இளையோர் தொழில் பயிற்சி*

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் இணைந்து இளையோருக்கான தொழில் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. KKSSS அரங்கத்தில் வைத்து தேதி பிப்ரவரி 14-16 வரை நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பேரா முனைவர் செல்வகுமார் M.Svc,Phd அவர்கள் கலந்து கொண்டு பேசும் போது

*பட்டியிலே ஆடு பெட்டியிலே பணம்*

வெள்ளாடு வளர்ப்பினை ஒரு தொழிலாகச் செய்து வெள்ளாடுக்கான இருப்பிட வசதி, தீவனம் அளித்தல், குட்டிகள் பாராமரிப்பு, நோய்த்தடுப்பு மற்றும் நவீனத் தொழில் நுட்பங்களைப் பின்பற்றுவதன் மூலம் பண்ணை உற்பத்தியை பெருக்கி பொருளாதாரத்தை உயர்த்தலாம். எனவும் கூறினார். இரண்டாம் நாள் பயிற்சியானது காலை 10 மணியளவில் துவங்கியது. முனைவர். செல்வ ராஜ் அவர்கள் இன்றைய ஆட்டுக் குட்டியே வருங்கால உணவுத் தேவை மற்றும் வலிமையான சந்ததிகளை உருவாக்கும் தூண்களாக இருக்கும் ஆகவே , இளம் குட்டிகளை கண்ணும் கருத்துமாக பேண வேண்டும் எனவும் தீவன மேலாண்மை பற்றியும் பயிற்சியளித்தார்.

இறுதி நிகழ்வில் KKSSS இயக்குநர் தந்தை. தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையேற்று சிறந்ததொரு தலைமையுரையாற்றினார். முனைவர் செல்வகுமார் M.Svc,Phd அவர்கள் சிறப்புரையாற்றி சான்றிதழ் வழங்கினார். இதில் 28 பயனாளிகள் பலனடைந்தார்கள்

*நிவாரணப் பொருட்கள்*

கன்னியா குமரி சமூக சேவை சங்கம் மற்றும் CTWwC திட்டம் சார்பில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 10 பஞ்சாயத்தில் பெருளாதரத்தில் நலிவடைந்த 111 குடும்பத்தினருக்கும் பிப்ரவரி 28 மற்றும் மார்ச் 1 தேதிகளில் 5 நாட்களுக்குரிய நிவாரணப்பொருட்கள் தொகுப்பு வழங்கப்பட்டது. இதில் ஓவ்வொரு குடும்பத்தினருக்கு தலா 5 கிலோ அரிசி, அனைத்து விதமான பருப்பு வகைகள் குளியல் மற்றும் துணிதுவைக்கும் சோப்பு

. மனிகைப்பொருட்கள் அடங்கிய தொகுப்பினை KKSSS இயக்குநர் தந்தை.தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையில் TASSOS நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரு. செல்லப்பாண்டி மற்றும் அந்தந்த பகுதியுலுள்ள பங்கு தந்தையர்களால் வழங்கப்பட்டது. இதனை CTwwc திட்ட ஒருங்கிணைப்பாளர் Sr.மெரின் றோஸ் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்கள். இந்த திட்டம் வழியாக 111 குடும்பத்தினர் பயனடைந்தனர்.

**அகில உலக நோயாளிகள் தினம்**

தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு சார்பில் அகில உலக



நோயாளிகள் தினம் கொண்டாடப்பட்டது. பிப்ரவரி 11 ஆம் தேதி பிலங்கரை தூய லோறேட்டா மாதா ஆலயத்தில் வைத்து தக்கலை மறைமாவட்ட ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் தலைமையிலும் பிப்ரவரி 13 தேதி வயலின்கரை புனித அந்தோணியார் ஆலயத்தில் மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு இயக்குநர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில்

அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது.இதில் படுக்கை நோயாளிகளுக்கு சிறப்பு திருப்பலி மற்றும் குணமளிக்கும் நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. தொடர்ந்து நோய்கள் வராமல் உடலைப் பாதுகாப்பது எப்படி என்ற தலைப்பில் கருத்தரங்கும் இரத்தக் கொதிப்பு மற்றும் சர்க்கரை நோய்களுக்கு இலவச பரிசோதனை உள்ளடக்கிய மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த நிகழ்வுகளை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழுவோடு இணைந்து பிலங்கரை மற்றும் வயலங்கரை அருட்பணியாளர்கள் ஒருங்கிணைத்து செபித்தார்கள்.

அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்

செயலர்

# மறைமாவட்டச் செய்திகள்

### புனித மதர் தெரசா ஆலயம், கல்லுவிளை அர்ச்சிப்பு

புனித மதர் தெரசா ஆலயச் சமூகமானது 2005 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. கடந்த 17 ஆண்டுகளாக, இச்சமூகமானது மறைக்கல்வி அலுவலகத்தில் அமைந்துள்ள சிற்றாலயத்தில் திருப்பலியை நிறைவேற்றியதோடு மற்ற பக்த செயல்களிலும் ஈடுபட்டு வந்தது. தனியாக ஆலயம் அமைக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் அதற்கான பணிகள், சீனாய் தியான இல்லத்திற்கு பின்னால் அன்றைய பங்குத்தந்தை சஜி எளம்பாசேரில் SDB அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அதன் பணிகளை தற்போதைய பங்குதந்தை எபி பூவத்துமூட்டில் அவர்கள் தொடர்ந்தார். பணிகள் நிறைவடைந்த நிலையில் அதன் அர்ச்சிப்பானது, 27.02.2022 அன்று தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களால் நிர்வகிக்கப்பட்டது.

### அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் அவர்களின் முனைவர் படிப்பு நிறைவு

நமது மறைமாவட்டத்தை சேர்ந்த அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் அவர்கள் உரோமையில், புனித ஆன்சலம் பல்கலைக்கழகத்தில் திருவழிபாட்டில் முனைவர் பட்டத்துக்கான ஆராட்சியில் ஈடுபட்டிருந்தார். அவர் தனது இறுதித் தேர்வை 25.02.2022 அன்று எதிர்கொண்டு, முனைவர் படிப்பை நிறைவு செய்திருக்கிறார்.

### அருட்தந்தையருக்கான தொடர் பயிற்சி

அருட்தந்தையருக்கான தொடர் பயிற்சி வகுப்புகள் 2022, பிப்ரவரி 23 மற்றும் 24 ஆம் தேதிகளில் தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. முதல் நாள் அமர்வின் போது, காஞ்ஞிரப்பள்ளி மறைமாவட்டத்தை சேர்ந்த அருட்தந்தை தோமஸ் பூவத்தானிக்குந்நேல் அவர்கள் அருட்தந்தையர் தங்கள் பணிகள் வழியாக புனித நிலை அடைய வேண்டியதன் அவசியத்தைப் பற்றிப் பேசினார்.

இரண்டாம் நாள் அமர்வின் போது, மறைமாவட்டத்தில் இயங்கி வரும்

துறைகளும் இயக்கங்களும் தத்தமது அறிக்கைகளை சமர்ப்பித்தனர். அவற்றின் மீதான விவாதங்களும் நடைபெற்றன.

### அருட்தந்தையர் பேரவை கூட்டம்

மறைமாவட்ட அருட்தந்தை பேரவை உறுப்பினர்கள் மற்றும் அருட்பணிப் பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளடக்கிய கூட்டமானது 14.02.2022 அன்று தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. 2024 ஆம் ஆண்டு, சீரோ மலபார் பொதுபேரவை கூட்டமானது நடத்த சபை அளவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கென "Mission and Life of the Syro Malabar Church in Response to the Needs of the Time" என்னும் மையக்கருத்துத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்தயாரிப்பாக ஒவ்வொரு மறைமாவட்டங்களும் பொதுமன்றம் நடத்த கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மையக்கருத்தின் துணைத்தலைப்புகள் தேர்ந்தெடுக்க கேட்கப்பட்டதை முன்னிட்டு, "Promoting of national and regional level dialogues with other sui iuris Churches in carrying out the common mission of the Universal Church" and "Inter-Eparchial collaboration in the Syro Malabar Church for the Ad Gentes mission" என்னும் தலைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. மறைமாவட்ட பொதுமன்றத்தின் பொறுப்பாளராக அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் செயல்படுவார்கள்.

### மறைமாவட்ட நல்வாழ்வு குழு கூட்டம்

மறைமாவட்ட நல்வாழ்வு குழு கூட்டமானது ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் 1.3.2022 அன்று நடைபெற்றது. செவிலியர்களாக மறைமாவட்டத்தில் பணியாற்றும் ஏழு அருட்சகோதரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். தமிழ்நாடு ஆயர் மாமன்றத்தின் நல்வாழ்வு குழு ஆற்றும் பணிகளைக் குறித்து அருட்தந்தை எபி பூவத்துமூட்டில் அவர்கள் விளக்கினார். அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் இதில் பங்கேற்றார்.

## இதர செய்திகள்

- தவக்காலத்தை முன்னிட்டு மறைமாவட்ட குருக்களுக்கான ஒருநாள் தியானம் சீனாய் தியான இல்லத்தில் வைத்து 15.03.2022 அன்று நடைபெறும்.
- மறைமாவட்டத்தின் முன்னாள் பரிபாலகர், காலஞ்சென்ற பேரருட்தந்தை பிலிப் கொடியந்தறா அவர்களின் இறப்பின் ஒன்பதாம் ஆண்டு நினைவுத் திருப்பலியும் நீத்தார் வேண்டலும் 9.3.2022 அன்று காயல்புறத்தில் வைத்து நடத்தப்பட்டது.
- MISSION QUEST போட்டியில் வென்றவர்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் 24.02.2022 அன்று தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்ற அருட்தந்தையர்கள் கூட்டத்தின் போது வழங்கப்பட்டது.

# வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| மகளிர் தினம் | - மார்ச் 8 |
| இளங்குருமடம் இல்லவிழா | - மார்ச் 11 |
| தென்காசி மறைத்தொண்டு தள கூட்டம் | - மார்ச் 12 |
| அருட்தந்தையர் ஒருநாள் தியானம் | - மார்ச் 15 |
| புனித யோசேப்பு திருநாள் | - மார்ச் 19 |

# மறைவட்டச் செய்திகள்

## நித்திரவிளை

- **புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ்சிறை**

*11.02.2022* அன்று அகில உலக குழந்தைகள் தினம் கொண்டாடப்படுவதை முன்னிட்டு பங்களவிலும் விழா சிறிப்பிக்கப்பட்டது. காலைத் திருப்பலி மற்றும் காணிக்கை பவனி குழந்தை ஏசோ பிள்ளைகள் சிறப்பித்தனர். திருப்பலிக்குப் பின்னர் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றப் பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டது. இக்கூட்டத்திற்கு பங்குத்தந்தை ஜோமோன் அவர்கள் தலைமை ஏற்றார்கள். அருட்சகோதரி மேரி ராணி SD அவர்கள் குழந்தைகளின் பண்புகள் அவர்கின் மனநிலைகள் பற்றி அவர்கள் பேசினார்கள். பின்னர் ஆசிரியை



ஸ்னேக லதா அவர்கள் பேசுகைகயில் குழந்தைகளின் உள்ளமானது எப்போதும் அன்பு நிறைந்ததாக உள்ளது என்று கூறினார். கூட்டத்தின் இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

*13.02.2022* அன்று அகில உலக நோயாளிகள் தினம் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் பங்கிலுள்ள நோயாளிகள் அனைவருக்காகவும் திருப்பலியின் வேளையில் செபிக்கப்பட்டது. *18.02.2022* முதல் *21.02.2022* வரை தியானம் நடைபெற்றது.

நோன்பிற்காக மக்களை தயாரிக்கும் நோக்குடன் நடத்தப்பட்ட தியானம் வழியாக ஒப்புரவு அருளடையாளம் தகுந்த தயாரிப்புடன் பெற்றுக் கொள்ளவும், புத்துணர்வு பெறவும் உதவி செய்யப்பட்டது. தியானத்தை அருட்தந்தை வர்கீஸ் பாறேக்காட்டில் VC அவர்கள் வழி நடத்தினார்கள்.

28 ஆம் தேதி காலை 6 மணிக்கு விபூதி திங்கள் அனுசரிக்கப்பட்டது.

- **புனித அந்தோணியார் ஆலயம் – வயலின்கரை**

பிப்ரவரி 13 ஆம் நோயாளிகள் தினம் அனுசரிக்கப்பட்டது. இருபத்தி நான்கு உடல் நலமற்றோர் ஆலயத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களுக்கு பாவசங்கீர்த்தனம் அளிக்கப்பட்டு, திவ்ய நற்கருணையும் நல்கப்பட்டது. மேலும் அவர்களுக்கு உணவு, பரிசு பொருட்கள், மருந்துப் பொருட்கள் அடங்கிய மருத்துவப் பை ஒன்றும் வழங்கப்பட்டது. அன்றைய தினம் திருப்பலியை அருட்தந்தை எபி பூவத்து மூட்டில் அவர்கள் தலைமையேற்று நிறைவேற்றியதோடு பொருட்களையும் வழங்கினார். மருத்துவ




முகாமும் நடத்தப்பட்டது. இரத்த அழுத்தம், சக்கரை அளவு ஆகியவை இலவசமாக பரிசோதிக்கப்பட்டது.

18 ஆம் தேதி பங்களவில் குழந்தை ஈசோ பிள்ளைகளின் போட்டிகள் நடைபெற்றன. 19 ஆம் தேதி குழந்தைகளுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று நடத்தப்பட்டது. அதை அருட்சகோதரி மெரின் ஜோஸ் SABS அவர்கள் வழிநடத்தினார்கள்.

20.02.2022 அன்று இளையோருக்கான கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் அனைத்து இளையோரும் தத்தம் வீடுகளில் காய்கனி தோட்டம் அமைத்து அதில் விளையும் கனிகளை அலயத்திற்கு கொண்டு வந்து அனைவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

26.-02.2022 அன்று திட்டங்குளாவிளை கன்னியர் இல்லத்தில்



புதுப்பிக்கப்பட்ட சிற்றாலயமானது ஆனது மந்திரிக்கப்பட்டது. குருகுலமுதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில், மறைவட்ட பங்கின் தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் மற்றும் அருட்தந்தை ரோபின்ஸ் குழிகோடில் ஆகியோர் திருப்பலி நிறைவேற்றினர். நிகழ்வில் சபைத்தலைவர் அருட்சகோதரி மேழ்சி ASMI அவர்கள் பங்கேற்றார்.

27.02.2022 அன்று இளையோருக்கான சிறப்பு பயிற்சியை திருத்தொண்டர் மகேஷ் அவர்கள் நடத்தினார்கள். அதே நாளில்,

பீடச்சிறுவர்களுக்கும் பயிற்சியை திருத்தொண்டர் அவர்கள் வழங்கினார்கள்.

2022, பிப்ரவரி 25 ஆம் தேதி KKSSS இன் நோய்த்தணிப்பு அலகின் சார்பில் பங்கில் உள்ள அனைத்து நோயாளிகளும் சந்திக்கப்பட்டனர்.

## படந்தாலுமூடு

- **புனித ஜோசப் ஆலயம் – குந்நுவிளை**

படந்தாலுமூடு மறைவட்ட ஆலயத்தின் கிளைப்பங்காக 2005 ஆம் ஆண்டு முதல் குந்நுவிளையில் செயல்பட்டு வந்த புனித சூசையப்பர் ஆலயத்தின் புதிய ஆலய கட்டுமான பணிகள் 28..7.2021 முதல் 20.2.2022 வரை நடைபெற்றது. புதிய ஆலயத்தின் அர்ச்சிப்பு விழாவானது 20.2.2022 அன்று மதியம் இரண்டு மணி அளவில் தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மஞ்சாலுமூடு மற்றும் படந்தாலுமூட்டைச் சார்ந்த இறைமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு செபித்தனர். அன்றைய சிறப்பு நிகழ்ச்சிகள் அனைத்தும் மஞ்சாலுமூடு மறை வட்ட ஆலயத்தின் பங்கு தந்தையும், குந்நுவிளை ஆலயத்தின் பங்கு தந்தையுமான பேரருட் தந்தை அகஸ்டின் தலோடில் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. படந்தாலுமூடு மறைவட்ட ஆலயப் பங்குத் தந்தை டென்சி முண்டுநடக்கல் அவர்களும் இந்நிகழ்வில் உடனிருந்தார். ஆலய அர்ச்சிப்பைத் தொடர்ந்து பொதுக்கூட்டம் ஆயர் தலைமையில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஆலயத் திருவிழாவானது 21.2.2022 முதல் 22.2.2022 வரை சிறப்பாக நடைபெற்றது.

- **புனித தோமையார் ஆலயம் – பளுகல்**

பளுகல் பங்கு SH சபையைச் சார்ந்த அருட்சகோதரி ஸ்டெல்லா மேரி அவர்கள் தங்கள் துறவற வார்த்தைப்பாட்டின் பொன்விழாவை 19.2.2022 அன்று பளுகல் கான்வென்டில் வைத்து கொண்டாடினார்கள். தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் ஜார்ஜ்

ராஜேந்திரன் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. இவ்விழாவிற்கு அருட்தந்தையர்கள், மற்றும் ஏராளமான அருட்சகோதரிகள் கலந்து கொண்டார்கள். அதைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்



கூட்டத்தில் கன்னியாகுமரி மிஷன் துவங்கிய காலகட்டத்தில் அருட்சகோதரியின் பங்களிப்பை நினைவு கூர்ந்தார் நம் மேதகு ஆயர் அவர்கள். அருட்தந்தையர்கள் வாழ்த்துக்கள் கூறியும், அருட்சகோதரிகள் வாழ்த்துப் பாடல்கள் பாடியும் விழாவிற்கு மெருகூட்டினர்.

- **திருஇருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு**

படந்தாலுமூடு மறைவட்ட ஆலயத்தைச் சார்ந்த அருட்சகோதரி பிந்து சாக்கோ MMM அவர்களின் துறவற வார்த்தைப்பாட்டின் வெள்ளி விழாவானது 13-2-2022 அன்று MMM கான்வென்ட் படந்தாலுமூட்டில் வைத்து நடைபெற்றது .படந்தாலுமூடு மறைவட்ட ஆலயத்தின் பங்கு தந்தை பேரருட்தந்தை டென்சி முண்டுநடக்கல் திருப்பலி நிறைவேற்றினார்.
இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் கலந்து கொண்டு அவருக்காக செபித்ததுடன் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

### ▸ புனித பவுல் ஆலயம் – தெற்றியோடு

இவ்வாண்டு பொன்விழா கொண்டாடுவதை முன்னிட்டு, அதற்கான பொதுக்குழு ஒன்று *20.02.2022* அன்று திருப்பலிக்குப் பின்னர் எடுக்கப்பட்டது. பொன்விழாவானது, இவ்வாண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதி நிறைவடைய இருக்கிறது.

பங்கில் செயல்பாடின்றி கிடந்த வின்சென்ட் தே பவுல் பெண்கள் சங்கமானது புதுப்பிக்க பல நாட்கள் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, *27.02.2022* அன்று புதுப் பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பெண்கள் சங்கம் முறையாக செயல்படும் நாள் வரை, ஆண்களும் பெண்களும் சேர்ந்து கூட்டம் நடத்துவதை தீர்மானிக்கப்பட்டது.

பொன்விவிழாவை முன்னிட்டு மறைக்கல்வி மாணவர்கள், புனித பவுலின் திருமுகங்களைப் பற்றி கூடுதலாக அறியவும் கற்கவும், தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளின் மீதான, விவிலிய வினாடி வினா எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் வயதின் அடிப்படையில் இருக்குழுக்களாக பிரிக்கப்பட்டு நடத்தப்பட்டு வரப்படுகிறது.

எல்லா புதன்கிழமைகளிலும் மாலை திருப்பலிக்குப் பின்னர், குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட விவிலிய வசனங்களை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கின்றார்கள்.

இளையோர் இயக்கம் சார்பாக, கோயில் புதுப்பிக்கும் நோக்குடன் குலுக்கல் *06.02.2022* அன்று நடத்தப்பட்டது. பங்குத்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் இளையோரின் முயற்சியைப் பாராட்டினார்கள்.

மாதர் ஜோதிஸ் சார்பாக, முழு விவிலியமும் கையால் எழுதும் முயற்சியானது மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. தவக்காலத்தில் மாலையில் ஒவ்வொரு நாளும் குடும்பங்களில் *100* மூவொரு இறைப்புகழ் செபம் சொல்வதென்றும், விவிலியம் *30* நிமிடங்கள் அன்றாடம் வாசிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும்,

மே மாதத்தில் புனித பவுலின் திருமுகங்களை அடிப்படையாகக் கொண்ட விவிலிய வினாடி வினா, இறைவசனங்களை மனப்பாடம் செய்து எழுதுதல் போன்ற போட்டிகள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. தவக்காலத்தை முன்னிட்டு *13.03.2022* அன்று 14 கோயில்களுக்குச் சென்று செபிக்கும் திருப்பயணமும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானங்கள் அனைத்தும் *28.02.2022* அன்று சாம்பல் திங்கள் திருப்பலியைத் தொடர்ந்து நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்டது

## மஞ்சாலுமூடு

### புனித தோமையார் ஆலயம் முழுக்கோடு



முழுக்கோடு புனித தோமையார் ஆலயத்தில் *6-2-2022* முதல் *13-2-2022* வரை புனித சாவற தந்தையின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு நாளும் மாலை 6 மணியளவில் திருப்பலி மற்றும் நவநாள் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் CMI அருட்தந்தையர்கள் திருப்பலி நிறைவேற்றினார்கள். *13.2.2022* அன்று நோயாளிகள் தினமாகவும் கொண்டாடபட்டு வீடுகளில் இருந்த நோயாளிகளை ஆலயத்தில் அழைத்து வந்து அவர்களுக்காக சிறப்பு ஜெபம் சொல்லப்பட்டு, இரவு உணவு வழங்கி அவர்கள் வீடுகளுக்கு கொண்டு சென்று விடப்பட்டனர்.

## களியல்

### லூர்து மாதா ஆலயம் – சேனங்கோடு

*13.02.2022* முதல் புனித லூர்து மாதா திருவிழாவானது திருக்கொடியேற்றத்துடன் தொடங்கியது. பங்குத்தந்தை சாஜன் நெட்டப்பொங்கு அவர்கள் கொடியேற்றி வைத்தார். தொடர்ந்து

மூன்று நாட்கள் திருவிழா நடைபெற்றது. மேலும் பிப்ரவரி 15, 16, 17 ஆகிய தேதிகளில் அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் அவர்கள் தலைமையில் நற்செய்திப் பெருவிழா நடைபெற்றது.

### ► புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

*13.02.2022* ஞாயிற்றுக்கிழமை நோயாளிகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டது. நோயாளிகள் திருப்பலியில் பங்குப்பெற





வைக்கும் நோக்கத்துடன் அவர்களுக்காக வாகன வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

அகில உலக குழந்தைகள் தினம் *20.02.2022* அன்று பங்களவில் அனுசரிக்கப்பட்டது. காலைத்திருப்பலியில் சிறப்பு காணிக்கைப் பவனியை குழந்தைகள் நடத்தினர். விவிலிய வசனங்கள் அடங்கிய வாசக அட்டைகளை அவர்கள் கைகளில் ஏந்தியிருந்தனர். திருப்பலியின் இறுதியில் குழந்தைகளுக்கான சிறப்பு செபம் நடைபெற்றது.

## தக்கலை–பிலாங்காலை

### புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் – காட்டாத்துறை

காட்டாத்துறை, புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் இறைமக்களின் நிலைவாழ்வை நோக்கிய பயணத்திற்கு புத்துயிர் அளிக்கும் முயிற்சியில் FCC அருட்சகோதிரிகளால் ஹோம் மிஷன் 2022 பிப்ரவரி 27, ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது. FCC துறவற சபையின் அழகியமண்டப மகாண தலைவி அருட்சகோதரி சீலியா அவர்களின் முன்னிலையில் ஹோம் மிஷன் நடைபெற்றது. அருட்சகோதரிகள், சீலியா றீமா, லிசபத், லிசி ஜோஸ், விஜயா, விமலா, சிசி மரியா, அனுபா, மேரி டோம், ஜூலியட், ஜோஸ்மி, ஜெசி, அபிஷா, மிஸ்டிகா, அர்ச்சனா, அனுஜா, ஷைனி, சாம் பிரியா, ஆகியோர்கள் இல்லங்களை சந்தித்து செபித்தனர். அருட்சகோதரிகள் பெனட், வினிதா, எலைசா ஆகியோர் நற்கருணை ஆண்டவர் முன்னிலையில் இறைமக்களுக்காகவும், அருட்சகோதரிகளுக்காகவும் இல்லங்கள் சந்தித்து முடியும் வரை செபித்தனர். மாலையில் தியானமும் நற்கருணை ஆராதனையும் அருட்தந்தை ரோபின்ஸ் குழிகோடில் மற்றும் திருத்தொண்டர் மகேஷ் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. ஹோம் மிஷன் சிறப்பாக நடைபெற பிப்ரவரி மாதம் முழுதும் திருப்பலிக்கு பின்னர் சிறு செபமும் 25,26 தேதிகளில் மாலை நேரம் தியானமும் நடைபெற்றது. 27 ஞாயிற்றுகிழமை அன்று காலையில் 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மாலையில் திருப்பலியுடன் நிறைவு பெற்றது.

### புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை. பிப்ரவரி மாதம் 11 ம் தேதி அகில உலக நோயாளிகள் தின சிறப்பு திருப்பலி பங்குதந்தை பேரருட்தந்தை தோமஸ் தெக்கேத்தலா CMI தலைமையில் நடைபெற்றது. பிப்ரவரி 13 ம் தேதி அன்று பங்குதந்தை யின் குருத்துவ அருட்பொழிவின் 25 ம் வருட வெள்ளி விழா கொண்டாட்டம் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது.



பிப்ரவரி மாதம் 28 ம் தேதி சாம்பல் திங்கள் திருப்பலி நடைபெற்றது.

- **புனித ஜார்ஜியார் ஆலயம் – ஆனையடி**

அருட்சகோதரி எஸ்.ஜே.எம் அவர்களின் அண்ணன் 21.02.2022 அன்று காலமானார். அவரின் நினைவு திருப்பலி 3.3.2022 அன்று ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. 28.02.2022அன்று சாம்பல் திங்கள் திருப்பலி நடைபெற்றது.

## ஆசைபுரம்

- **கிறிஸ்து அரசர் ஆலயம்– பாலப்பள்ளம்**

06.02.2022 அன்று சிறப்பு பங்குப் பேரவை கூட்டமானது நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஆனக்குழி கிறிஸ்து அரசர் கிளவுஸ் பேக்கிங் அலகு கட்டிட விரிவாக்கம் பற்றி விவாதிக்கப்பட்டதோடு, பங்கு ஆலயத்தில் பலிபீடம் புதுப்பித்தல் மற்றும் இடவசதி கூட்டுதல் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

13.02.2022 அன்று நோயாளிகள் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நோயாளிகளுக்கு அன்றைய தினம் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. நோயுற்று வீடுகளில் இருப்போருக்கு, நற்கருணை வழங்கப்பட்டது. அன்றைய தினம் பங்குப் பொதுமன்றமும் கூட்டப்பட்டது. அதில் பங்குப்பேரவையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் ஒரு மனதாக

ஏற்கப்பட்டன. தொடர்ந்து கல்லறைத் தோட்ட செடி திருவிழா எவ்வாறு நடத்த வேண்டும் எனவும் ஆலோசிக்கப்பட்டது.

*27.02.2022* அன்று கல்லறைத் தோட்ட குருசடி ஆண்டுவிழா, நீத்தார் நினைவு தினம் ஆகியவை பங்களவில் சிறப்பாக அனுசரிக்கப்பட்டது. அன்று மாலை 4.30 மணியளவில் மறைக்கல்வி ஆசிரியர்கள் முன்னின்று நடத்திய ஜெபமாலையுடன் தொடங்கப்பட்ட பவனியானது கல்லறைத் தோட்டத்தை சென்றடைந்தது. அங்கு வைத்து செபவழிபாடு, கல்லறை மந்திரிப்பு, ஒப்பீசு ஆகியவை நடைபெற்றன. இறுதியில் அனைவருக்கும் அன்பின் விருந்து அளிக்கப்பட்டது.

*28.02.2022* அன்று சாம்பல் திங்கள் திருப்பலியுடன் சிறப்பிக்கப்பட்டது.

- **புனித வியாகப்பர் ஆலயம்– மாங்கரை**

*13.02.2022* அன்று குழந்தை ஈசோ இயக்கக் குழந்தைகளின் விழாவானது சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருப்பலிக்குப் பின் பங்குதந்தை பிரின்ஸ் மாலியில் அவர்கள் தலைமையில் கூட்டமானது ஆரம்பமானது. பங்குத்தந்தை விவிலியத்திலிருந்து ஒறு பகுதி வாசித்து அதன் விளக்கத்தை உரையாக கூறினார். அதன் பின்னர் குழந்தைகளின் தலையில் கைவத்து செபிக்கும் நிகழ்வும் நடந்தது.

*13.02.2022* அன்று துறவற அர்ப்பண வாழ்வின் வெள்ளிவிழா காணும் SABS அருட்சகோதரிகள் ஜெயின் மேரி, அல்போன்ஸ், ராணி மரியா ஆகியோருக்காக செபிக்கும் நோக்குடனும் அவர்களின் பணிகளை பாராட்டி கவுரவிக்கும் பொருட்டும் சிறப்புத் திருப்பலியும் பாராட்டு விழாவும் பங்களவில் நடத்தப்பட்டது.

- **தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்**

*13.02.2022* அன்று பங்கு பொதுமன்றம் பங்குத்தந்தை ஜிம்மி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. புதிய கைக்காரர்களுக்கான பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன.

*20.02.2022* அன்று பங்கு பேரவைக் கூட்டம் நடைபெற்றது. வஜன

ஜோதி நடத்துவது பற்றியும், ஆலயம் சுத்தம் செய்தல் பணிக்கு ஒருவரை நியமிப்பது பற்றியும் விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கக்கப்பட்டன.



*27.02.2022* அன்று பங்குதந்தை ஜிம்மி அவர்கள் மறைக்கல்வி மாணவர்களுக்கு வகுப்பு நடத்தினார். மறைக்கல்வி முடிந்தவுடன் ஆசிரியர்களுக்கு சிறப்பு வகுப்பு நடத்தப்பட்டது.

- **திருக்குடும்ப ஆலயம் – தக்காளிவிளை**

தக்காளிவிளை திருக்குடும்ப ஆலயத்தின் வெள்ளிவிழாவை



முன்னிட்டு வஜன ஜோதி 6.2.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று பங்குத்தந்தை சுபின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. உறவிய பொறுப்பாளர்களிடம் அருட்தந்தை அவர்கள் விவிலியத்தையும் ஒளிச்சுடரையும் அளித்தார்.

- **புனித லோரேட்டோ மாதா ஆலயம் – பிலாங்கரை**

ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பங்கிலுள்ள அனைத்து உறவியங்களிலும் உறவிய ஆண்டுவிழா நடைபெற்றது. இதில் முதல் பகுதியில் செபமும் இரண்டாம் பகுதியில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

பிபரவரி மாதம் பங்கிலுள்ள எல்லா உறவியங்களிலும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் உறவிய செபம் நடைபெற்றது.

பிபரவரி மாதம் 11 ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று பங்கில் நோயாளிகள் தினவிழா மிக சிறப்பாக நடைபெற்றது. மாலை 6 மணிக்கு மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை ஆராதனை மற்றும் நோயாளிகளுக்கான கைவைத்தல் செபமும் நடைபெற்றது. திருப்பலிக்கு பிறகு மறைமாவட்ட நலவாழ்வு குழு தலைமையில் இலவச மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்றன.

பிபரவரி மாதம் 18 ம் தேதி குழந்தைகள் தினம் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்று காணிக்கை பவனியும் குழந்தைகளுக்கான சிறப்பு கைவைத்தல் செபமும் நடைபெற்றது.

**தகவல் சேகரிப்பு: திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி, ஷைலா | மெரின் சுஜித்**

## BISHOP'S ENGAGEMENTS March 2022

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Tue | 03.00 pm | Bishops House: Consulters meeting |
| 2 | Wed | 02.00 pm | Bishop's House >> Madurai |
| 3 | Thu | 07.00 am | Madurai: TNBC Meeting>> Thuckalay |
| 4 | Frid | 03.00 pm | Athencode: Dn Mahesh's family visit |
| 5 | Sat | 10.00 am<br>11.30 am | Bishop's House: Visitors from Coimbatore |
| 6 | Sun | | Bishop's House |
| 7 | Mon | 12.30 pm<br>02.00 pm | Bishop's House: MM Mother General's Visit<br>Meeting with Rev. Fathers |
| 8 | Tue | 09.30 am<br>11.00 am<br>02.00 pm | Soosaipuram: Women's day Celebration at Alphonsa College<br>Padanthalumoodu: MM Convent Chapel Blessing<br>KKSSS: Women's Day Celebration |
| 9 | Wed | 09.30 am | Curia Meeting (admission to diaconate, Vestition and minor orders) |
| 10 | Thu | 11.00 am<br>04.00 am | KKSSS: Scholarship meeting<br>Mukkoottukal: Minor Seminary Visit\| Meeting with the Regency Brothers |
| 11 | Fri | 06.30 pm | Online: Minor Seminary Home Day and Parents Meet |
| 12 | Sat | 06.00 pm | Tenkasi Mission visit |
| 13 | Sun | 02.00 pm | Padanthalumoodu: Vincent De Paul CC Silver Jubilee Inauguration |
| 14 | Mon | 11.00 am | Kanjirapally: Dn Josemon's family visit |

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 15 | Tue | 09.30 am | Kalluvilai: Priests Monthly recollection |
| 16 | Wed | 09.30 am<br>12.30 pm | Curia Meeting<br>Meeting with Deacons \|Homily Exam for Deacons |
| 17 | Thu | | Meeting with Rev. Fathers |
| 18 | Fri | | Meeting with Rev. Fathers |
| 19 | Sat | 04.00 pm | Trivandrum: Episcopal Ordination |
| 20 | Sun | 08.30 am | Cheenivilai: Holy Qurbana |
| 21 | Mon | 10.00 am | Sangamam: Health awareness Seminar (On Artemisia) |
| 22-26 | Tue-Sat | | Meeting with Rev. Fathers |
| 27 | Sun | 07.00 am | Anjugramam: Holy Qurbana |
| 28 | Mon | | Meeting with Rev. Fathers |
| 29 | Tue | | Meeting with Rev. Fathers |
| 30 | Wed | | Meeting with Rev. Fathers |
| 31 | Thu | 04.30 pm | Kurusumala: Holy Qurbana |

**Rev. Fr. Robin Jose, Bishop's Secretary**



SABS Tamil Nadu Province Declaration @ Soosaipuram, 2022, Feb. 6.






Very Rev. Fr. Philip Kodianthara Death Anniversary Holy Mass



Fr. Philip Kodianthara, Death Anniversary @ Kayalpuram, 2022, Feb. 9



Visit to Mar Joseph Powathil, Episcopal Golden Jubilee, 2022, Feb. 9

Ash Monday Holy Mass @ Pallikonam, 2022, Feb. 28





Uraviya Anniversary @ Thackalivilai, 2022, Feb. 27



Consecration, St. Mother Theresa Church, Kalluvilai, 27.02.2022





**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay

Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay, Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175

Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570